மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : (அ) மற்றும் (ஆ) திண்டிவனம் நகரத்தில் பிற்பட்டோர் வகுப்புத் துறையால் நடத்தப்படும் பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவர் விடுதி தற்போது இல்லை. எனவே, கேள்விக்கு இடமில்லை.

(முற்பகல் 9-50)

திருக்காட்டுப்பள்ளியில் பிற்படுத்தப்பட்ட மாணவிகளுக்கான விடுதி ஏற்படுத்தும் திட்டம்.

314—*வினா எண் 19398—திரு. மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் திருக்காட்டுப்பள்ளியில் பிற்படுத் தப்பட்ட மாணவிகளுக்கு விடுதி (Hostel) ஏற்படுத்த அரசிடம் கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

செண்பகவல்லி அணையைப் பழுதுபார்க்கும் திட்டம்.

259—(*வினா எண். 18061)—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்பு மிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் வாசுதேவநல்லூருக்கு மேற்கே உடைந்துள்ள செண்பகவல்லி அணையைக் கட்டுவதற்கு அர சிடம் செயற் குறிப்புள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எப்போது கட்டப்படும் ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) மற்றும் (ஆ) செண்பகவல்லி அணை மற்றும் கன்யாமதுகு கால்வாயைப் பழுது பார்க்கும் பணிக்காக கேரள அரசு அனுப்பியுள்ள திருத்திய மதிப் பீட்டுக்கு தமிழக அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. பணிகளை உடனே மேற்கொள்ளுமாறு கேரள அரசு கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது.